Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 29 | [12-05-93] | புதன்கிழமை | ஓசை 83

## தமிழீழ கல்விப் பொதுத் தேர்வில் இவ்வருடம் விஞ்ஞானம் செயன்முறை

பாடசாலைகளில் மாணவர்களின் செயன்முறை மூலமான விஞ்ஞானபாடக் கற்றலை ஊக்குவிக்கும் முகமாகவும், மாணவர்களின் செயன்முறை தொடர்பான திறன்களை மதிப்பீடு செய்வதற்கும் ஏற்ற முறையில் இவ்வருடம் நடைபெற விருக்கும் க. பொ. தேர்வில் ஒரு பகுதியாக விஞ்ஞான பாடத்தில் செயன்முறைத் தேர்வும் நடாத்தப்படும். கடந்த காலங்களில் யாழ். மாவட்டப் பொதுத்தேர்வின் போது ஆண்டு 7முதல் 10ஆம் வகுப்புவரை நடுவருடத் தேர்வின் ஒருபகுதியாக நடைபெற்றது போன்று, நிலையத் தேர்வு முறையில் (Station Techniques) இத்தேர்வு நடாத்தப்படும். தேர்வு நாடிகள் ஒவ்வொருவரும், தேர்வு நிலையத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட 10 அமைப்புகளில் தாங்களாகவே விஞ்ஞானச் செயன் முறைகளில் ஈடுபட்டு வழங்கப்பட்ட வினாக்களுக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி மீதான பொருளாதாரத்தடை; நீக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்!

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 4-00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## புதிய ஜனாதிபதி வாக்குறுதி

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தபின் நான்கு அல்லது ஐந்து தினங்களில் முடிவொன்றை அறிவிப்பதாக சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா வாக்குறுதி அளித்துள்ளார்.

கொழும்பில் தன்னைச் சந்தித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கத்தின் கோரிக்கை தொடர்பாகவே புதிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கான முன்னோடி நல்லெண்ண நடவடிக்கையாக வடபகுதி மீதுள்ள பொருளாதாரத்தடையை அரசாங்கம் விலக்கிக்கொள்ளுமானால் அது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நல்லெண்ணத்தைக் கொண்டுவர உதவியாக இருக்கும் என ஜோசப் பராசசிங்கம் தெரிவித்தபோதே டி. பி. விஜயதுங்கா இவ்வாறு குறிப்பிட்டார்

முழுமையான பொருளாதாரத் தடையை நீக்குவதானால், தமக்கு நான்கு ஐந்து நாள் தவணை தரும்படியும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் அதுபற்றி முடிவெடுப்பதாகவும் புதிய ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், விசாரணை எதுவுமின்றி சிறையிலுள்ள 827 தமிழ் இளைஞர்களில் குறிப்பிட்ட தொகையினரை விடுவித்தால் அதுவும் ஒரு நல்லெண்ண முயற்சியாக இருக்கும் எனவும் டி. பி. விஜயதுங்காவிடம் பரராஜசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மணலாறு மோதலில் ஓர் இராணுவ சிப்பாய் பலி

(கொழும்பு)

மணலாறு பிரதான முகாமிற்கு அருகே விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும்இடையே ஏற்பட்ட திடீர் மோதலில் ஓர் இராணுவச் சிப்பாய் பலியாகியதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சண்டை சிலநிமிட நேரங்கள் நீடித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்ப் பொது மகன் இராணுவத்தால் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூருக்கு சென்ற தமிழ் பொதுமகன் ஒருவரை ஜி. பி. எஸ். முகாம் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கணபதிப்பிள்ளை ராதாகிருஷ்ணன் (வயது 32, மூன்று பிள்ளைகளின் தந்தை, கட்டைபறிச்சான் மூதூர்) என்பவரே படையினரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

## வல்வை. வாலிபர் கொழும்பில் கைது

(கொழும்பு)

வல்வெட்டித்துறை வாலிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் தபால்கள்

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் நாளை காலை பருத்தித் துறைக்கு வந்துசேரும் என்றும், இக்கப்பலில் சுமார் 600க்கு மேற்பட்ட தபாற்பொதிகள்எடுத்து வரப்படுகின்றன என்றும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன (30)

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## திட்டமிட்டபடி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் சேவையின் அதி சிறப்பு (சுப்றா) வகுப்பு விசேட பரீட்சையும், வினைத்திறமைகாண் (ஈ. பீ.) பரீட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலில் தமிழ் மக்கள் நவசமசமாஜ கட்சிக்கு வாக்களிக்குமாறு ஈ.

## அரசாங்கம் அழைத்தாலும் பதவி வகிக்கப்போவதில்லை

### ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

நான் தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். இப்போது நான் ஐக்கிய தேசியக்கட்சியின் சாதாரண உறுப்பினராகக் கூட இல்லை. எனவே அரசாங்கம் அழைப்பு விடுத்தாலும் கூட எதிர்காலத்தில் எந்தப் பதவிப் பொறுப்பையும் கூறியுள்ளார்.

1978-ல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புபற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேலும் கூறுகையில், அதுஇப்போதும் செயற்படுகிறது. அதனால் தான் பாராளுமன்றத்தின்மூல யான அரசுகள் அமைவதற்கு துணைசெய்கின்றது. இத்தாலீ இந்தியா போன்ற நாடுகளில் பிரதமர்தான் அதிகாரமுடையவராக இருக்கின்றார். இதனால்தான் நரசிம்மராவ் தமது நாட்டைவிட்டு வெளியே செல்லக் கூட இயலாதவராக இருக்

# முகலன் வீதி சடலம்

# இராணுவத்தால் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூருக்கு சென்ற தமிழ் பொதுமகன் ஒருவரை ஜி பி. எஸ். முகாம் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கணபதிப்பிள்ளை ராதாகிருஷ்ணன் (வயது 32, மூன்று பிள்ளைகளின் தந்தை, கட்டைபறிச்சான் மூதூர்) என்பவரே படையினரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

# வல்வை. வாலிபர் கொழும்பில் கைது

(கொழும்பு)

வல்வெட்டித்துறை வாலிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## திட்டமிட்டபடி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் சேவையின் அதி சிறப்பு (சுப்றா) வகுப்பு விசேட பரீட்சையும், வினைத்திறமைகாண் (ஈ. பீ.) பரீட்

(4ஆம் பக்கம் பார்க்க)

ர்பாகவே புதிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கான முன்னோடி நல்லெண்ண நடவடிக்கையாக வடபகுதி மீதுள்ள பொருளாதாரத்தடையை அரசாங்கம் விலக்கிக்கொள்ளுமானால் அது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நல்லெண்ணத்தைக் கொண்டுவர உதவியாக இருக்கும் என ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தபோதே டி. பி. விஜயதுங்கா இவ்வாறு குறிப்பிட்டார்

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய

மின்றி சிறையிலுள்ள 827 தமிழ் இளைஞர்களில் குறிப்

காவிடம் பரராஜசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அரசாங்கம் அழைத்தாலும் பதவி வகிக்கப்போவதில்லை

## ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

நான் தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். இப்போது நான் ஐக்கிய தேசியக்கட்சியின் சாதாரண உறுப்பினராகக் கூட இல்லை. எனவே அரசாங்கம் அழைப்பு விடுத்தாலும் கூட எதிர்காலத்தில் எந்தப் பதவிப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இவ்வாறு லலித் மற்றும் பிரேமதாசா ஆகியோர் கொல்லப்பட்ட பின்பு சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

1978-ல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புபற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேலும் கூறுகையில், அதுஇப்போதும் செயற்படுகிறது. அதனால் தான் பாராளுமன்றத்தின்மூலமாக ஜனாதிபதியைத் தெரிவு செய்யமுடிந்துள்ளது எந்தஅரசியலமைப்பும் பூரணமானது எனக் கூறிவிடமுடியாது. ஏதாவது சங்கடங்கள் இருக்குமெனின் பாராளுமன்றத்தின் மூலம் சில திருத்தங்கள்செய்யப்படலாம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமெரிக்கா, பிரான்ஸ் போன்றநாடுகளில் நன்கு செயற்படுகின்றது. உறுதியான அரசுகள் அமைவதற்கு துணைசெய்கின்றது. இத்தாலீ இந்தியா போன்ற நாடுகளில் பிரதமர்தான் அதிகாரமுடையவராக இருக்கின்றார். இதனால்தான் நரசிம்மராவ் தமது நாட்டைவிட்டு வெளியே செல்லக் கூட இயலாதவராக இருக்கின்றார்.

எனினும் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைப்பது நல்லது. அப்படிச்செய்தால் இந்தஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்தமுடியும் என்றும் ஜே. ஆர். தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவின் ஆளுமை பற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலில் தமிழ் மக்கள் நவசமசமாஜ கட்சிக்கு வாக்களிக்குமாறு ஈ. பி. ஆர். எல். எவ். வேண்டுகோள்விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வுக்கான சிந்தனையும், அரசியல் திட்டமும் ஐக்கிய தேசிய கட்சிக்கும், சுதந்திர கட்சிக்கும் இல்லை என்றும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# முகலன் வீதி சடலம் லலித்தை சுட்டவரது அல்ல

## லலித்தின் மெய்ப்பாதுகாவலர் தகவல்

(கொழும்பு)

லலித்தை சுட்டவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தேன். எனினும் முகலன் வீதியில் சடலமாகக் காணப்பட்டவர் நான் தாக்குதல் நடத்தியவர் அல்ல என்று காலஞ்சென்ற லலித் அத்துலத்முதலியின் மெய்ப்பாதுகாவலரான திலக் சாந்த என்னும் முன்னாள் அதிரடிப்படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் குறிப்பிட்டார்.

லலித் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணையில் லலித்தின் நலனைக் கவனிக்கும் சட்டத்தரணிகள் ஐலன்ட் பத்திரிகைக்கு இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஆறு வருடங்களுக்கு மேலாக ஆர். எப் எனப்படும் விசேட அதிரடிப்படைப் பிரிவில் கடமையாற்றியவரான திலக் சாந்த இதேபோன்ற தகவல்களை 'ஸ்கொட்லன்ட்யார்ட்' விசாரணைக் குழுவினருக்கும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிசார் இதுபற்றிக் கூறுகையில்; திலக் சாந்த பயன்படுத்திய துப்பாக்கி தற்போது பொலிசார் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும், சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தமைக்காக திலக் சாந்த விசாரணைக்கு உட்படுத்தப் படமாட்டார் என்றும், பதிலுக்கு துணிகரமான நடவடிக்கைக்காக அவருக்கு சிறப்பு விருது வழங்கப்படலாம் என்றும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# கறுக்காய்த் தீவுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்

(தென்மராட்சி)

கறுக்காய்த்தீவுப் பகுதியிலுள்ள இராணுவ முகாமை அண்டிய பகுதியில் நேற்று மாலை 6-00 மணியளவில் கடும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் ஆனையிறவு முகாமிலிருந்து குடியிருப்புகள் மீது கடும் எறிகணைத் தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் பதவியில் சூரேக்கு ஆர்வமில்லையாம்

(கொழும்பு)

சிறிசேன கூரேயிடம் பிரதமர் பதவியை ஒப்படைப்பது பற்றி ஆலோசனை கலந்தபோது அவர் அதில் ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயற்தழுக் கூட்டமே இரண்டாம் திகதி இடம் பெற்றபோது அதில் ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளரா டி.பி. விஜயதுங்க ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, பிரதமர் பதவிக்கான வேட்பாளர் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அப்போது சிறிசேன கூரேயின் பெயரும் பரிசீலிக்கப்பட்டபோது சிறிசேன கூரே பிரதமர் பதவிக்கு ஆர்வம் காட்டவில்லை என்பதாலேயே ரணில் பிரதமராகத் தெரிவாகினார் என தெரியவருகிறது.

**வீரச்சாவு**



கப்டன் அகிலன்

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியில் இராணுவத்தினருடன் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட மோதல் ஒன்றில் கப்டன் அகிலன் (ஆறுமுகம் சிவஞானம்- அராலி கிழக்கு வட்டுக்கோட்டை) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மன்னப்பிட்டி கிராமத்தில் ஆதரவாளர் சுட்டுக்கொலை

## ஆசிரியர் ஒருவர் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மன்னப்பிட்டி கிராமங்களில் அரசால் வளர்க்கப்படும் பச்சைப்புலிகளினதும் பொலிசாரினதும் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

மன்னப்பிட்டி சொருவில் எனும் இடத்தை கடந்த சனி அன்றுகாலை 5.45 மணியளவில் சுற்றிவளைத்த பொலிசார் அப்பகுதி பொதுமக்களைத் துன்புறுத்தியதுடன் விடுதலைப் புலிகள் ஆதரவாளர் ஒருவரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் இராசதுரை ஜீவரத்தினம் (வயது 22, 2 பிள்ளைகளின் தந்தை, மன்னப்பிட்டி) என்பவராவார்.

இதேதினம் அதிகாலை 4.00 மணியளவில் பச்சைப் புலிகள் மன்னப்பிட்டியைச் சேர்ந்த ஆசிரியரான செல்வகுமார் பதமநாதன் (வயது 28, ஒரு பிள்ளையின் தந்தை) என்பவரை கடத்திச் சென்றுள்ளனர்.

# பொலிசாரின் செயல் குறித்து புலனாய்வுப் பிரிவு திகைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்த இடத்தை ஒருசில மணி நேரங்களிலேயே பொலிசார் தூய்மைப்படுத்திவிட்டது கண்டு குற்றப்புலனாய்வுப் பொலிசாரும், ஸ்கொட்லான்ட் யார்ட் விசாரணைக் குழுவினரும் திகைப்படைந்து இருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டுமுதல் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றால் அந்த இடங்களை உடனடியாக துப்புரவு செய்துவிடவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதன் அடிப்படையிலேயே பிரேமா கொலையுண்ட சம்பவம் இடம்பெற்ற ஆமர்வீதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரகசியப் பொலிஸ் பிரிவிற்கு புதிய பணிப்பாளர்

சிறிலங்காவின் இரகசியப் பொலிஸ் பிரிவின் புதிய பணிப்பாளராக செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

சி. ஐ. டி. பிரதிப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரின்டன் புஞ்சிப்பண்டா செனிவிரத்ன கடந்த திங்கள் முதல் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸ் பிரிவு இலாகாவில் 30 வருடத்திற்கு மேல் கடமை ஆற்றியுள்ள இவர் 35 வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் இலாகாவில் சேர்ந்தார்.

# காமினிக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்புவாபஸ்

## கட்சிப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களில் பங்கேற்கும் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி வேட்பாளர்களின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் அறிவித்திருப்பதாக ஜ ஐ தே முவின் பேச்சாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; கூட்டங்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ள போதும் தலைவர்களின் பாதுகாப்பிற்காக ஆயுதம் வழங்க அரசாங்கம் இணங்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சிலிருந்து அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சிடம் சுமார் 80 தன்னியக்க ஆயுதங்களை ஜ. ஐ தே. முன்னணி முன்னர் கோரியிருந்தது தெரிந்ததே.

இதேவேளை முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் தத்தமது பாதுகாப்பிற்காக ஆயுதங்களை இன்னமும் வைத்திருக்கும் அதேவேளை வேட்பாளர்களுக்கு ஆயுதம் வழங்க மறுப்பது பாரபட்சமானது என்றும், தேர்தலுக்கான வாக்களிப்பு நாள் நெருங்க வன்செயல் சம்பவங்கள் மேலும் அதிகரிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை காமினி திசாநாயக்காவின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ அணி விலக்கிக் கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# காமினியை ஆதரிக்குமாறு லலித்தின் மனைவி கோரிக்கை

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவையும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியையும் ஆதரிக்கும்படி காலஞ்சென்ற லலித்தின் பாரியார் திருமதி சிறிமணி சிறிலங்காப் பிரஜைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருமதி சிறிமணி மேலும் கூறுகையில்; காமினியும், லலித்தும் அரசியல் ரீதியாக ஒரே விதமான எண்ணக் கருத்துக்களையே கொண்டிருந்தார்கள் என்றும், ஜனநாயக ரீதியான செயற்பாடுகளுக்கு சுதந்திரமளிக்கக் கூடிய இயல்பான புதிய சமூக அமைப்பு ஒன்றை அமைப்பது பற்றி எண்ணக் கனவுகளை கொண்டிருந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### பழைய பொருள்கள் உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்ட சுவர் மணிக்கூடுகள், நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால், உங்கள் பழைய சுவர்மணிக்கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6542)

### Your Watches & Radios?

Repairs of Watc es&Radios Guaranteed DIl KA WATCH& RADIO ORKS, 284 S anley Road, Ariyakulam Junction, Jatfna Branch: Kandy Road, Chavakachcheri. (சி-6608)

### தேவை

பனம் தும்பு உற்பத்தி செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும் தேவன் பல்தொழில் நிறுவனம், கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு. கோண்டாவில். (மாவீரர் டானியல் தும்புத் தொழிலகம்.) (4852)


### திருட்டு அதிகரிப்பு

(தொல்புரம்)

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவ வன்முறையால் இடம் பெயர்ந்த மக்களின் வீட்டுவளவுத் தோட்டங்களிலுள்ள தென்னைமரங்களில் தேங்காய் களவாகப்பறிக்கும் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. (41)


### M. Sc. IN BIOTECHNOLOGY

Graduates in chemical biological medical dental veterinary, agricul ural and engineering sciences will be considered Forward


# களுத்துறைச் சிறையிலிருந்து ஆறு தமிழர் விடுதலை

(கொழும்பு)

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

விசாரணை எதுவுமின்றி பல வருடங்களாக மேற்படி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவ் ஆறு இளைஞர்களே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதைத் தொடர்ந்து 500 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதில் 6 பேர் மட்டுமே தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### இளையதம்பி கந்தையா

ஜனனம் 21. 08. 1920 — அஸ்தமனம் 12. 04. 1993

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

12/23 சன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(4851)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப். மண்டேலா

# இலவச கொப்பிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இயங்கி வரும் புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயம், இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் மற்றும் துரைச்சாமி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு புங்குடுதீவு.நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது. (22)


## மீண்டும் இயங்குகிறது

கடந்த சில காலமாக நாட்டின் நிலைமை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தேவன் பல்தொழில் நிறுவனம் மீண்டும் 3 5-93 தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது. பனம் தும்பு, தென்னம்தும்புகளினாலான வீட்டுப்பாவனைப் பொருட்கள் கொழும்புத் தயாரிப்புக்கு இணையாக எம்மால் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

### தேவன் பல் தொழில் நிறுவனம்

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

(மாவீரர் டானியல் தும்புத் தொழிலகம் )

4853)


## அறிவித்தல்

### வ. இ. ச. சபை அறிமுறைப்பரீட்சை – 1993

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக, 1993- 05- 15, 1993- 05- 16 ஆகிய இருதினங்களில் நடைபெறவிருந்த மேற்படி சபையின் அறிமுறைப்பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை தேர்வுநாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத்தலைவரும்.

(சி-6576)

## அறிவித்தல்

### வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

1993. 03. 31ஆம் திகதி முடியவுள்ள வாக்காளர் இடாப்பு

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 31 03. 1993ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி. கோணாந்தோட்ட வீதி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தற்காலிக நிவாரணக்கிளைகளில் அங்கத்தவர்களின் பார்வைக்காக (10. 05. 1993-ம் திகதி தொடக்கம் 21 05. 1993ஆம் திகதி வரையான காலப் பகுதியில்) வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் 21. 05. 1993ஆம் திகதி தொடக்கம் 31. 05. 1993 வரையான காலப்பகுதிக்குள், செயலாளர் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.

செயலாளர்.

# நினைவு கூருகின்றோம் ... 1993-05-12

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - வெருகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். இளங்கோ [இத்தூஸ்பிள்ளை மேரிதாசன் - லிங்கநகர் - திருமலை]

முல்லைத்தீவு - முத்தையன்கட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

சுதன் [அ. சுந்தரராசா -புதுக்குடியிருப்பு - மணலாறு]

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிகுண்டு வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

ராம் / ஞானம் [சானைக்குட்டி தனபாலசிங்கம் - கீரிமலை வீதி, மாவிட்டபுரம் - யாழ்.]

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ வைரமுத்து [தங்கத்துரை - எல்.பி - 03 - மூதூர்]

1988ஆம் ஆண்டு யாழ். உரும்பராயில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். சின்னக்காந்தி (இராசையா உதயபாலன் - உரும்பராய் கிழக்கு - யாழ்.)

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

பிரான்சிஸ் (சூசை பிரான்சிஸ் - தங்கவேலாயுதபுரம் - அம்பாறை)

கிளிநொச்சி – இரணைமடுப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விவசாய ஆராய்ச்சி ஊழியர்.

1991ஆம் ஆண்டு சின்னமடுவில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் சுந்தர் (அடைக்கலம் அமிர்தநாதன் - 1-ம் வட்டாரம், நெடுந்தீவு - யாழ்.)

வவுனியா கோழியாகுளம் - மாதர்பனிக்கர்குளம், மகிழங்குளம், ரம்பைக்குளம், பூவரசங்குளம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய -

அன்பன் (நடராசா தவசீலன் – வாகனேரி - மட்டு )

சிவசங்கர் (நேசராசா உதயசங்கர் - தும்பன்கேணி - மட்டு.)

லெப். கஸ்ரோ (இராசப்பு விமலநாதன் - இருதயபுரம் மூதூர் - திருமலை)

2-ம் லெப். றிச்சாட் (சித்திரவேல் நாகேந்திரன் - சகாயபுரம், மூதூர் - திருமலை)

2–ம் லெப். கீதன் (சுந்தரலிங்கம் விம ச்சந்திரன்- செம்மலை - மணலாறு)

2-ம் லெப். வியாசன் (காராளசிங்கம் விக்னேஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி - மணலாறு)

2–ம் லெப். செட்டி (பெரியசாமி லோகேஸ்வரன் - 5-ம் கட்டை, அலம்பில் - மணலாறு)

கேதீஸ் (சாந்தலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை, முள்ளியவளை - முல்லைத்தீவு)

பீலிஸ் (சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை - முல்லைத்தீவு)

புஸ்பகாந் ஐயாத்துரை சிவதர்சன் - யோகபுரம் மத்தி, குஞ்சுக்குளம் - மல்லாவி)

2-ம் லெப். ஜெனா (யோகநாதன் பிரான்சிஸ் சேவியர் - பள்ளிமுனை - மன்னார்)

2-ம் லெப். அலோசியஸ் [கந்தையா ரவிந்திரன்- நாகதாழ்வு, மாந்தை - மன்னார்]

மக்களின் வீட்டுவளவுத் தோட்டங்களிலுள்ள தென்னைமரங்களில் தேங்காய் களவாகப்பறிக்கும் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. (41)

---

**M. Sc. IN BIOTECHNOLOGY**

Graduates in chemical biological medical dental veterinary, agricultural and engineering sciences will be considered. Forward application with biodata. All applicants will be required to sit for a qualifying examination and a viva. Address correspondence to Registrar University of Jaffna. Closing date: 1993-05-31

REGISTRAR
University of Jaffna,
1993-05-10.

(சி-6606)

---



## 2-ம் லெப். மண்டேலா

(தனபாலசிங்கம் தமிழழகன்)

| வீரப்பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 25-10-1973 | 12-05-1991 |

விண்ணதிர வெடி தீர்த்து — தமிழ்
மண் மீட்க புறப்பட்ட மறவர் கூட்ட
மண்டேலா மாவீரனே — எம்
எண்ணமெல்லாம் நிறைந்துவிட்டாய் இனி.

ஆறுகால்மடம்.

— குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(4850)

---

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

1993. 03. 31ஆம் திகதி முடியவுள்ள
வாக்காளர் இடாப்பு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 31 03. 1993ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி. கோணாந்தோட்ட வீதி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தற்காலிக நிவாரணக்கிளைகளில் அங்கத்தவர்களின் பார்வைக்காக (10. 05. 1993-ம் திகதி தொடக்கம் 21 05. 1993ஆம் திகதி வரையான காலப் பகுதியில்) வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் 21. 05. 1993ஆம் திகதி தொடக்கம் 31. 05. 1993 வரையான காலப்பகுதிக்குள், செயலாளர் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.

செயலாளர்.
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(சி 6602)

---

## 2ஆம் ஆண்டு நினைவாக..



## வீரவேங்கை கீரோ

[இராமகிருஷ்ணன் இதயராஜா]

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 10-10-1973 | 12-05-1991 |

(வவுனியாவிலிருந்து ஓமந்தையை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்துடனான சண்டையில் வீரச்சாவு)

தாயகம் மீட்டிடும் காவியத் தலைவனின்
தானையில் வேங்கையாய் தாவிய வீரனே!
எல்லையை மீறிய எதிரியை வீழ்த்திட
எரிமலை யாகியே எழுந்த நம் வீரனே!
விடுதலை, விடுதலை, விடுதலை என்றுமே
வீசிடும் காற்றுடன் வீசிய வீரனே!
களத்தினில் ஆடியே காவியம் ஆனாய்
கண்களில் ஆடியெம் நெஞ்சினில் வாழ்வாய்.

என்றும் உன் நினைவுடன் வாழும்

அப்பா, அம்மா, சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள்
அண்ணிமார்கள், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(4855)

---

புரம் மூதூர் - திருமலை)

2-ம் லெப். றிச்சாட் (சித்திரவேல் நாகேந்திரன் - சகாயபுரம், மூதூர் - திருமலை)

2-ம் லெப். கீதன் (சுந்தரலிங்கம் விமலச்சந்திரன்- செம்மலை - மணலாறு)

2-ம் லெப். வியாசன் (காராளசிங்கம் விக்னேஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி - மணலாறு)

2-ம் லெப். செட்டி (பெரியசாமி லோகேஸ்வரன் - 5-ம் கட்டை, அலம்பில் - மணலாறு)

கேதீஸ் (சாந்தலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை, முள்ளியவளை - முல்லைத்தீவு)

பீலிஸ் (சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை - முல்லைத்தீவு)

புஸ்பகாந் ஐயாத்துரை சிவதர்சன் - யோகபுரம் மத்தி, குஞ்சுக்குளம் - மல்லாவி)

2-ம் லெப். ஜெனா (யோகநாதன் பிரான்சிஸ் சேவியர் - பள்ளிமுனை - மன்னார்)

2-ம் லெப். அலோசியஸ் [கந்தையா ரவிந்திரன்- நாகதாழ்வு, மாந்தை - மன்னார்]

ஈஸ்வரன் (பெருமாள் சசிக்குமார் - தாமரைக்குளம், அடம்பன் - மன்னார்)

தேவா/தேவி ஜஸ்ரின் செல்டன் - தலைமன்னார் - மன்னார்)

வின்சன்/நிக்சன் (இராசரத்தினம் சுதாகரன் - முல்லைத்தீவு வீதி, வைரவர் கோயிலடி, பரந்தன் - கிளிநொச்சி)

கப்டன் வெங்கடேஸ் (பாலசுப்பிரமணியம் மோகனதாஸ் - 'அம்பிகா வாசம்' வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை - யாழ்.)

2-ம் லெப். டியூட்சல் (சிவப்பிரகாசம் கிறேசியன்- பெரியமாவடி, சாவகச்சேரி - யாழ்.)

2-ம் லெப். மண்டேலா (தனபாலசிங்கம் தமிழழகன் - மயில்வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை - யாழ்.)

கீரோ (இராமகிருஷ்ணர் இதயராசா - நீர்வேலி வடக்கு - யாழ்.)

லோகா (சென்பற்றியான் டேவிட் - அரியாலை - யாழ்.)

அருள்/வெள்ளை (முருகையா செல்வச்சந்திரன் - அருள்வீதி, நாவற்குழி, கைதடி - யாழ்.)

மனோ ( — மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு - யாழ்.)

1992ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் முதலைக்குத்திப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

துரோணன்/செலஸ்ரின் (தளையசிங்கம் நேசானந்தராசா - சுதந்திரபுரம், உடையார்கட்டு - முல்லைத்தீவு)

மட்டு. முனைக்காட்டுப் பகுதியில் இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் -

திருத்தணி (கணபதிப்பிள்ளை திருத்தணி - முனைக்காடு - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6607)

---

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி வளர்ச்சிக்காக
பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்படும்

## ஒரே மேடையில் இரு நாடகங்கள்

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்
S.G. சாந்தன் அரிச்சந்திரனாகவும்
அரியாலையூர் V. செல்வம்
நடிககலாமணி சந்திரமதியாகவும்
இணைந்து வழங்கும்

அரியாலை கலை ஒளி மன்றத்தின்
**அரிச்சந்திரா**
**மயானகாண்டம்**

வில்லிசைப் புலவர் சின்னமணி யமனாகவும்
கானக்குயில் திருமதி மனோகரி
சற்குருநாதன் சாவித்திரியாகவும் தோன்றும்
மாதனைக் கலைமன்றம் அளிக்கும்

**சாவித்திரி**
(இசைநாடகம்)

இடம்: அத்தியார் இந்துக்கல்லூரி மைதானம்
காலம்: 13-05-1993 (நாளை) வியாழன் இரவு 7.30
பிரவேசம்: குடும்பம் - ரூபா 100.00, ரூ. 50.00.
தனிநபர் - ரூபா 10.00

விளம்பர அன்பளிப்பு:
சடாட்சரம் - புவிச்சந்திரன்
**வீனஸ் தங்க மாளிகை**
187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(4715)

சிந்தனைக்கு
குரங்குகள் ஆடும்போது மரக்கிளையில் இருக்கும் அணில்களுக்குத்தான் அச்சம்.
- மலாய்ப் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## மாகாணசபைத் தேர்தலும் சிங்களவர் குழப்பமும்

சிறிலங்காவில் திட்டமிட்டபடி மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதன் பிரகாரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவுடன் தேர்தல் பிரசார வேலைகள் முடிவடையவுள்ளன, திங்கட்கிழமை தேர்தல் வாக்களிப்புக்கள் இடம்பெறவுள்ளன. தேர்தலைக் கண்காணிக்கவென வெளிநாட்டு அவதானிகள் குழு கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

அதாவது தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகி விட்டன. ஆனால், வாக்காளர்கள்தான் யாருக்கு வாக்களிப்பது? ஏன் வாக்களிப்பது? என்பது குறித்துக் குழம்பிப் போயுள்ளனர்.

சிறிலங்காவில் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் இரு முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டமையே இக்குழப்பத்திற்குக்காரணம் போல் இருப்பினும் அதற்கு அப்பாலும் மாகாண சபைத்தேர்தல் குறித்து ஒரு தெளிவின்மை வாக்காளரிடம் நீண்ட காலமாகவே உள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்விற்கென அறிமுகமாக்கப்பட்டதே மாகாணசபைகள் ஆகும். ஆனால், ஆரம்பத்தில் இருந்து மாகாண சபைகள் சிறப்புறச் செயற்படவில்லை. வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவாக்கமும், அதற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விதமுமே மிகவும் குளறுபடி மிக்கதாகும். வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவம் துப்பாக்கி முனையில் மாகாணசபைக்கெனத் தேர்தலை நடத்தியது. தெற்கில், பிரதான எதிர்க்கட்சி தேர்தலைப் பகிஷ்கரிக்க, மறுபுறம் வன்முறையும், இரத்த ஆறும் ஓட, மக்கள் வாக்களிக்க வெளியில் வர அஞ்சிக் கொண்டிருந்த வேளையில் மாகாணசபைத்தேர்தல் இடம்பெற்றது.

இதேவேளை, அன்றும் தென்னிலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது ஏன்? அதற்காக ஏன் சிங்கள மக்கள் வாக்களிக்கவேண்டும் என்ற கேள்வி அவர்கள் மத்தியில் இருந்தது. ஆனால், அவர்களுக்குப் பதில் கிட்டவில்லை. இன்றும் அதேகேள்வி அவர்களிடம் உள்ளது. தற்பொழுதும் பதில் இல்லை. ஆனால், 1988ஐவிட இன்று அக்கேள்வி இன்னும் பலமாகவே எழுந்துள்ளது. ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் வடக்கு கிழக்கில் இல்லை. அங்கு மாகாணசபைகள் இயங்

# மண்டபம் அகதி முகாமில் அதிகாலைதிடீர்சோதனை

[சென்னை]

தமிழக முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளை தூக்கத்திலிருந்தவேளை தட்டி எழுப்பி பொலிசார் திடீர்சோதனை நடாத்தினர்.

தமிழகத்தில் உள்ள மண்டபம்அகதிமுகாமில் நேற்றுமுன் தினம் அதிகாலை 4.00 மணியளவில் இத் திடீர்சோதனை நடைபெற்றது.

சுமார் 6400 இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள இம் முகாமில் மக்கள் தூக்கத்தில் இருந்த வேளை சுமார் இருநூறு தமிழக பொலிசார் இம்முகாமைச் சுற்றிவளைத்து மக்களை எழுப்பி கியூவில் நிற்குமாறு பணித்தனர்.

மக்கள் அனைவரும் எழுந்து கியூவில் நின்றதும் ஒவ்வொருவராக பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் இவர்களது அடையாள அட்டைகள், ஆவணங்கள், பொருள்கள் ஆகியன சோதனையிடப்பட்டன. இச் சோதனை பல மணி நேரம் நீடித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்பு காஞ்சிபுரத்திலும் மதுரையிலுமுள்ள தடுப்பு முகாம்களில் இருந்து ஏழுதமிழ் இளைஞர்கள் தப்பி ஓடியமை தெரிந்ததே.

இவர்களைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையிலேயே பொலிசார் இச்சோதனையை நடத்தியதாகத் தெரியவருகின்றது.

## விடுதலைப் புலிகள் மீது தீவிர கண்காணிப்பு தேவை
- வாழப்பாடி

தமிழக அரசு விடுதலைப் புலிகள் மீது கூடுதலான கண்காணிப்பு செலுத்த வேண்டும் என தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கொலை செய்யப்பட்டதை அடுத்தே அவர் இக்கோரிக்கையை தமிழ்நாடு அரசிற்கு விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டுறவு ஊழியர் கொடுப்பனவு மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

1988-ம் ஆண்டு தைமாதத்திற்குப் பின்னர் சேவையில் இணைந்த கூட்டுறவு ஊழியர்களுக்கு ரூபா 314 கொடுப்பனவு வழங்குவதில் சங்கங்கள் தற்போது கடைப்பிடிக்கும் முறையையே தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் சுற்று நிருபம் மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவை இதுவரை வழங்கிவரும் சங்கங்கள் தொடர்ந்து வழங்குமாறும் வழங்காத சங்கங்கள் வழங்காமல் இருக்குமாறும் சென்ற மாதம் 19-ம் திகதி தொடக்கம் செயற்பட்டுவரும் 'கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு' இது விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும்வரை சங்கங்கள் தமது நடைமுறைகளை மாற்றவேண்டாம் எனவும் அவர் அச் சுற்று நிருபத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (22)

## மாடு திருடியவர்கள் பிடிபட்டனர்

(தென்மராட்சி)

இரு மாடுகளை களவாடிய இருவர்பொதுமக்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது; கைதடி நுணாவில் மடத்தடி சுமன் வீதியைச் சேர்ந்த திரு. பரராசசிங்கம் என்பவரது வீட்டில் விடப்பட்ட இரு வண்டில் மாட்டினையும் கடந்த 4ஆம் திகதி அன்று வீட்டில் இவரின் தகப்பனார் மட்டும் இருந்தவேளையில் திருடர்கள் இருவர் அந்த இருமாட்டினையும் கொண்டு சென்றபோது மக்கள் இவர்களைப்பிடித்து காவல்துறையினரிடம் கொடுத்துள்ளனர். இவர்கள் இதேபோன்று கோப்பாய், உரும்பராய் பகுதிகளிலும் பல மாடுகளை திருடி உள்ளார்கள் என விசாரணைகள் மூலம் தெரிய வருகின்றது. (86)

## சட்டவிரோத ஆயுதம்; இளைஞர் மீது வழக்கு

[கொழும்பு]

சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வெடிமருந்துகள் மற்றும் பயங்கர ஆயுதங்களை யாழ்ப்

லேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர் யாழ்ப்பாணத்தில் 30. 7. 87 இற்கும் 31. 3. 89

## கொழும்பு தனியார்விடுதியில் ஆறு லட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு தனியார் விடுதி ஒன்றில் தமிழர்களின் ஆறுலட்சம்ரூபா பெறுமதியானபணம், நகைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளது.

தம்மைப் பொலிசார் என அறிமுகப்படுத்தி சோதனை இட வந்திருப்பதாகக்கூறி பம்பலப்பிட்டியில் உள்ள தனியார் விடுதி ஒன்றிற்குள் சிவில் உடையில் புகுந்த ஐந்து பேர் இவ் விடுதியில் தங்கியிருந்தவர்களிடம் இருந்துஆறுலட்சம் ரூபாவிற்கும் அதிகமான ரொக்கப்பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். கடந்த சனிக்கிழமை அதிகாலை நடைபெற்ற இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் பற்றி பம்பலப்பிட்டி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமிர்தலிங்கம் கொலைக்கு இன்று தீர்ப்பு

சிறிலங்காவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் கொலை வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் கொலை வழக்கு விசாரணை முடிவுற்றதாகவும் இக் கொலை விசாரணையின் தீர்ப்பு இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கில்அலோசியஸ், விசு, அருள் ஆகியோருடன் சேர்ந்து கொலைக்கு சதி செய்ததாக வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே.

# தொப்பிகலை காட்டில் பாரிய இராணுவ முகாம்

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொப்பிகலை காட்டில் மீண்டும் பாரிய ராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பெருமளவு லொறிகள், உழவு இயந்திரங்களில் தங்களுக்குரிய உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற படையினர் பெரும் பரப்பளவிலான முகாம் ஒன்றினை அமைத்துள்ளதாக தெரியவருகின்றது.

ஒரு வருடத்திற்கு முன்னர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொண்டு தொப்பிகலையில் முகாம் அமைக்கப்பட்ட போதிலும் பின்னர் அம்முகாம் மூடப்பட்டது. தற்போது மீண்டும் அப்பகுதியிலேயே இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். 500இற்கு மேற்பட்ட படையினர் அங்கு நிலை கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை படையினர் உழவு இயந்திரங்கள் பலவற்றை தொப்பிகலைக்கு எடுத்துச் சென்றிருப்பதால் தமிழ், முஸ்லிம் விவசாயிகளின் வேளாண்மைச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொப்பிகலையை அண்டியுள்ள வயல் நிலங்களுக்குச் செல்வதையும் விவசாயிகள் நிறுத்தியுள்ளனர். தொப்பிகலை பகுதியில் பால் சேகரிப்பில் ஈடுபடுவதையும் பால் விற்பனையாளர்கள் நிறுத்தியுள்ளனர்.

## வதிவிடவேளாண்மைபோட்டி பரிசளிப்பு விழா

யாழ். மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 1993ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் வலிகாமம் கோட்டத்திலே வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று 12ஆம் திகதி உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் இரவு 7.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் க. வேங்கையன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திருக்குமரன் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்கவுள்ளார்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வலிகாமம் கோட்ட தளபதி இளங்குமரன் அவர்கள்வழங்கவுள்ளார்.

## பிரேமதாசா குண்டுவெடிப்பு

## சாளரம் கருத்தரங்கு

செம்பியன்பற்று பிரதேச சனசமூக நிலையங்களின் ஆதரவோடு, இன்று செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் பிற்பகல் 3மணி முதல் 6மணி வரை-திரு ஏ.டி அரியரஞ்சன் ஆசிரியர் தலைமையில் நடைபெறும் "சாளரம்" இதழ் கருத்து நிகழ்வில் வண.டி. டேவிற் அடிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

## வினாவிடை போட்டி

அகிலஇலங்கைரீதியில் நடாத்தப்பட உள்ள கத்தோலிக்க விவிலிய வினாவிடைப் போட்டிக்கான போட்டியாளர்களை தெரிவு செய்யும் நோக்குடன் யாழ் மறைவட்ட தெரிவுப் பரீட்சை யாழ். மறைக்கல்வி

றுபடி மிக்கதாகும். வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவம் துப்பாக்கி முனையில் மாகாணசபைக் கெனத் தேர்தலை நடத்தியது. தெற்கில், பிரதான எதிர்க்கட்சி தேர்தலைப் பகிஷ்கரிக்க, மறுபுறம் வன்முறையும், இரத்த ஆறும் ஓட, மக்கள் வாக்களிக்க வெளியில் வர அஞ்சிக் கொண்டிருந்த வேளையில் மாகாணசபைத்தேர்தல் இடம்பெற்றது.

இதேவேளை, அன்றும் தென்னிலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது ஏன்? அதற்காக ஏன் சிங்கள மக்கள் வாக்களிக்கவேண்டும் என்ற கேள்வி அவர்கள் மத்தியில் இருந்தது. ஆனால், அவர்களுக்குப் பதில் கிட்டவில்லை. இன்றும் அதேகேள்வி அவர்களிடம் உள்ளது. தற்பொழுதும் பதில் இல்லை. ஆனால், 1988ஐவிட இன்று அக்கேள்வி இன்னும் பலமாகவே எழுந்துள்ளது. ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் வடக்கு கிழக்கில் இல்லை. அங்கு மாகாணசபைகள் இயங்கவுமில்லை. இந்நிலையில் தெற்கிற்கு அவ்வாறு ஓர் அமைப்பு ஏன் அவசியமாகவுள்ளது என்பதே அதுவாகும்.

இக்குழப்பம் போதாதென்று சிங்களவர் மத்தியில் தற்பொழுது எழுந்துள்ள குழப்பம் யாருக்கு வாக்களிப்பதென்பதேயாகும். அதாவது, சிறிலங்கா அரசின் தலைவராக இருந்த பிரேமதாசாவும், அவரின் பிரதான எதிரியாகக் கருதப்பட்ட லலித் அத்துலத் முதலியும் கொல்லப்பட்ட நிலையில் மக்கள் தேர்தல் குறித்து குழப்பத்தில் ஆழ்ந்துள்ளமை நியாயமே. இதனை கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களில் இருந்தே காணக்கூடியதாகவுள்ளது.

தேர்தலில் கட்சிகளுக்கிடையிலான கொள்கை மோதல் என்பதிற்குப் பதிலாக தனிப்பட்ட நபர்களின் மோதல்களாக உருவாகியிருந்த தென்னிலங்கை அரசியலில் திடீரென விமர்சனத்திற்குரிய அரசியல்வாதிகளின் இழப்பு கட்சிகளுக்கு இடையில் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களே வலுவிழந்து போயுள்ளவையாக மாற்றி விட்டன. இந்நிலையில் தேர்தல் பிரசாரம் என்பது பெரும் சூடு பிடித்ததாகவோ அன்றி விவாதத்திற்குரியதொன்றாகவோ மாறவில்லை. பிசுபிசுத்துப் போனதென்றாகவே உள்ளது. லலித்தைக் கொன்றது பிரேமதாசா தான் எனச் சிங்களவர் நம்பினும், பிரேமதாசாவிற்கு எதிராக வாக்களித்து தமது எதிர்ப்பினைக் காட்ட அவரும் உயிருடனில்லை.

மற்றும், முக்கிய கட்சி இரண்டும் தமது தலைமையைத் திடீரென இழந்தமையால், தாம் எங்கு நோக்கிச் செல்கின்றோம் என்பது குறித்து கட்சிகளின் அடுத்த தலைவர்களுக்குப் புரியவில்லை. ஏனெனில் கட்சிகளின் முழுப்பொறுப்பையும் ஏற்று இறந்த இருவருமே வழி நடத்திவந்தனர். இந்நிலையில் தற்பொழுது உள்ளவர்கள் மக்களுக்கு எதைக் கூறுவது எவ்வாறு வழிநடத்திச் செல்வது? என்பதில் குழம்பிப்போய் உள்ளனர்.

ஆகையினால், சிங்கள மக்கள் மாகாணசபை தேர்தல் குறித்துக் குழப்பமடைவதும், தடுமாற்றம் அடைவதும் தவிர்க்க முடியாத ஒன்றே. ஏன் உருவாக்கப்பட்டது என விளங்கமுடியாத ஒரு சபைக்காகக் கட்சிகள் எங்கே செல்கின்றன என்று கட்சித் தலைமைக்கே தெரியாத நிலையில் இருக்கும்போது, மக்கள் அச்சபைக்கு வாக்களிப்பது என்பது ஒரு வகையில் துயரமான ஓர் அனுபவமே.

(தென்மராட்சி)

இரு மாடுகளை களவாடிய இருவர்பொதுமக்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது; கைதடி நுணாவில் மடத்தடி சுமன் வீதியைச் சேர்ந்த திரு. பரராசசிங்கம் என்பவரது வீட்டில் விடப்பட்ட இரு வண்டில் மாட்டினையும் கடந்த 4ஆம் திகதி அன்று வீட்டில் இவரின் தகப்பனார் மட்டும் இருந்தவேளையில் திருடர்கள் இருவர் அந்த இருமாட்டினையும் கொண்டு சென்றபோது மக்கள் இவர்களைப்பிடித்து காவல்துறையினரிடம் கொடுத்துள்ளனர். இவர்கள் இதேபோன்று கோப்பாய். உரும்பராய் பகுதிகளிலும் பல மாடுகளை திருடி உள்ளார்கள் என விசாரணைகள் மூலம் தெரிய வருகின்றது. (86)

## சட்டவிரோத ஆயுதம்; இளைஞர் மீது வழக்கு

[கொழும்பு]

சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வெடிமருந்துகள் மற்றும் பயங்கர ஆயுதங்களை யாழ்ப்பாணத்தில் வைத்திருந்ததாக வத்தளை இளைஞர் ஒருவர் மீது கொழும்பு நீதிமன்றம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

அவசரகால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வத்தளை ஹேக்கித்த வலயமுனை வீதியைச் சேர்ந்த நேசமுத்த ஜீட்சில்ஸ்லி நேசராஜா என்கின்ற வாலிபரின் மீது கொழும்பு,மேல் நீதிமன்ற நீதிபதி வீரசூரிய முன்னிலையிலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர் யாழ்ப்பாணத்தில் 30. 7. 87 இற்கும் 31. 3. 89 இற்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்படி சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் கைரேகையை பதிவுசெய்ய உத்தரவிட்ட நீதிபதி களுத்துறை சிறையில் தொடர்ந்து தடுத்து வைக்க உத்தரவிட்டார். மேலும் நீதிபதி வழக்கை ஜூலை 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் பாரிய இராணுவ நடவடிக்கை எடுத்துச் சென்றிருப்பதால் தமிழ்,முஸ்லிம் விவசாயிகளின்

## வதிவிடவேளாண்மைபோட்டி பரிசளிப்பு விழா

யாழ். மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 1993ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் வலிகாமம் கோட்டத்திலே வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று 12ஆம் திகதி உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் இரவு 7.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் க. வேங்கையன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திருக்குமரன் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்கவுள்ளார்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வலிகாமம் கோட்ட தளபதி இளங்குமரன் அவர்கள்வழங்கவுள்ளார்.

பிரேமதாசா குண்டுவெடிப்பு

## இருவரது சடலங்கள் அடையாளம் தெரியவில்லை

சிறிலங்கா முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சம்பவத்தில் பலியான 24 பேரில் இருவரது சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இதுவரை அடையாளம் காணப்படாத இவ் இருவரும் கொலையாளிக்கு உடந்தையாக செயல்பட்டவர்களாக இருக்கலாம் என சிறிலங்காவின் புலனாய்வுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சந்தை விலைவிபரம் (10-05-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல். | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 29.50 | 30.65 | 31.15 | 30.40 | 30 50 | 29.50 | 30.65 | 31.65 |
| 02. | கோதுமை மா | ,, | 13.00 | 13.30 | 13.65 | 14.00 | 13.00 | 13.00 | 13.10 | 13.50 |
| 03. | சீனி | ,, | 48.00 | 40.00 | 53.30 | 49.00 | 44.50 | 40.00 | 48.65 | 49.50 |
| 04. | கத்தரி | ,, | 19.15 | 31.65 | 21.30 | 27.30 | 19.00 | 18.00 | 29.30 | 24.65 |
| 05. | வெண்டி | ,, | 20.65 | 25.65 | 15.00 | 28.65 | 13.50 | 25.00 | 31.30 | 39.00 |
| 06. | பாகல் | ,, | 37.65 | 54.65 | 26.65 | 39.00 | 40.00 | — | 38.30 | 31.00 |
| 07. | புடோல் | ,, | 17.00 | 27.30 | 16.30 | 20.65 | 21.00 | 16.00 | 20.00 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 30.00 | 43.65 | 21 65 | 28.65 | 28 00 | 25.00 | 39.30 | 34.65 |
| 09. | தக்காளி | ,, | 44.65 | 76.00 | 40.65 | 40.00 | 31.00 | 60 00 | 60.00 | — |
| 10. | வாழைக்காய் | ,, | 18.00 | 30.00 | 20.65 | 25.00 | 40.00 | 22.00 | 24 30 | 31.30 |
| 11. | பீற்றூட் | ,, | 16.50 | 25.30 | — | 18.00 | — | — | 28.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 20.30 | 29.30 | 18.30 | 28.00 | 23.75 | 19.30 | 17.80 | 16.50 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 65.00 | 99.30 | 56.65 | 85 00 | 65.00 | 50.00 | 73.30 | 68.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 210.00 | 283.30 | 280.00 | 178.30 | 190.00 | 200.00 | 193.30 | — |
| 15. | வெங்காயம் | ,, | 18.50 | 26.50 | 21.30 | 19.00 | 25.25 | 19.00 | 23.80 | 25.50 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 30.00 | 35.30 | 31.65 | 32.65 | 33.50 | 45.00 | 30.00 | — |
| 17. | இறால் | ,, | 130.00 | 100.00 | 80.00 | 63 30 | 95.00 | 120.00 | 86.60 | — |
| 18. | பெரியமீன் | ,, | 190.00 | 152.90 | 173.30 | 112.75 | 131.25 | 86.65 | 61.65 | — |
| 19. | சிறியமீன் | ,, | 120.00 | 120.00 | 100.00 | 76.25 | 93.30 | 60.00 | 40.00 | — |
| 20. | முட்டை | ஒன்று | 8.50 | 8.30 | 7.50 | 7.90 | 8.00 | 7.50 | 7.60 | 6.50 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

சனசமூக நிலையங்களின் ஆதரவோடு, இன்று செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் பிற்பகல் 3மணி முதல் 6மணி வரை-திரு ஏ.டி அரியரஞ்சன் ஆசிரியர் தலைமையில் நடைபெறும் ''சாளரம்'' இதழ் கருத்து நிகழ்வில் வண.டி. டேவிற் அடிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

### வினாவிடை போட்டி

அகிலஇலங்கைரீதியில் நடாத்தப்பட உள்ள கத்தோலிக்க விவிலிய வினாவிடைப் போட்டிக்கான போட்டியாளர்களை தெரிவு செய்யும் நோக்குடன் யாழ் மறைவட்ட தெரிவுப் பரீட்சை யாழ். மறைக்கல்வி நிலையத்தினால் ஜூன்மாதம் 26ஆம் திகதி யாழ்பாடசாலைகளில் நடத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக யாழ். மறைக்கல்வி நிலையம்தெரிவித்துள்ளது.

இப்போட்டிகள் முதலில் பாடசாலை மட்டத்திலும் பின்னர் மறைவட்டங்களிலும் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

### நீரிறைக்கும்இயந்திரம் திருட்டு

சங்குவேலி பகுதியில் தோட்டக் கிணற்றில் பொருத்தப் பட்டிருந்த நீரிறைக்கும்இயந்திரம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை பட்டப்பகலில் திருடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்குவேலியைச் சேர்ந்த ப. மகேந்திரதாசன் என்பவரது பதினோராயிரம் ரூபா பெறுமதியான 'என்பீல்ட்'ரக நீரிறைக்கும் இயந்திரமே களவாடப்பட்டிருக்கிறது. (21)

### பதிவு செய்ய ஏற்பாடு

யாழ். குடாநாட்டில் திருமணப்பதிவு இல்லாமல் கணவன் மனைவியாக வாழும் பெற்றோர்கள் தமது விவாகப் பதிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். பிரிவு விவாகப் பதிவாளர் திரு. பி. எஸ் திருச்செல்வம் ஏற்பாடு செய்துள்ளார். இதுவரை விவாகப் பதிவுகள் இல்லாமல் பெற்றோராகியுள்ளவர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலப் பிரச்சினைகள் பற்றி சிந்திக்க வேண்டும். காலம் கடந்த பொழுதிலும் திருமணப்பதிவுகள் முக்கியம் என்பதனை உணரவேண்டும். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேண்டிய ஆலோசனைகளை 210 நாவலர்வீதி, பணிமனையில் பெற்று நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஈழநாதம்

## பிரேமாவின் இறுதி கிரியைக்கு சென்ற

# படையினரின் நிலைகுறித்து பத்திரிகைகள் விசனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகளின்போது படையினர் நடத்தப்பட்ட விதம் குறித்து கொழும்பு பத்திரிகைகள் விசனம் தெரிவித்துள்ளன.

மன்னாரிலிருந்து சுமார் ஐந்நூறுக்கும்மேற்பட்ட படையினர் அதிகாலை 4-30 மணியளவில் இறுதிக் கிரியைகளின் பின்னால் ஏற்படக்கூடிய வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டனர். இரவு முழுவதும் கடுமையான கடற் பயணத்தை மேற்கொண்ட படையினர் இறுதிக் கிரியைகள் நடைபெறும் இடமான சுதந்திர சதுக்கத்தில் தங்குவதற்கு சென்றபோது விளையாட்டு அமைச்சு அதிகாரிகளால் மேலும் சிலமணி நேரம் பொறுத்திருக்கும்படி பணிக்கப்பட்டனர். இதனால் வடபகுதியில் புலிகளுடன் போரிட்ட படையினர் கொழும்பில் அதிகாரிகளுடனும் போரிடவேண்டி ஏற்பட்டது.

எனினும் அதிஷ்டவசமாக படையினரில் எவரும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தாமையினால் அமைதி நிலவியது. கடுமையான வெயில் பிரயாணக்களைப்பு என்பவற்றுடன் நண்பகலுக்குப் பின்னர் வரையும்கூட ட்ரக் வண்டிகளில் காத்திருக்க வைக்கப்பட்ட பின்பே அவர்களுக்காக சுதந்திர சதுக்கத்தில் இடம் ஒதுக்கப்பட்டது.

இதேவேளை பதில் ஜனாதிபதி அன்று காலையில்தான் அங்குள்ள அமைச்சு அலுவலகத்தை பரிசோதித்து அனைத்து ஒழுங்குகளும் ஒழுங்காக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

## சம்பளம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பங்குனி மாதத்திற்குரிய சம்பளம் இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவு சுன்னாகத்தில் உள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து "காசோலை"யாக வழங்கப்படவுள்ளதாக லங்கா சீமெந்து நிறுவன கணக்காளர் சி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

[பா]

## அதிகாரப் பரவலாக்கலுக்கு திட்டம் முன்வைப்பேன்

### சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

நான் பதவிக்கு வந்தால் அதிகாரப் பரவலாக்கலுக்கான ஒரு திட்டத்தை முதலில் முன்வைப்பேன். அதன் மூலம் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்கு வர அழுத்தங்கள் கொடுப்பேன் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சண்டே ஐலண்ட் வாரப் பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் பிரேமதாசா தனது அறிக்கைகளைத் தவிர எந்த அதிகாரப் பரவலாக்கல் அலகையும் முன்வைக்கவில்லை என்றும்குற்றம் சாட்டினார்.

மற்றுமொருகேள்விக்கு அவர் பதிலளிக்கையில் லலித் மற்றும் பிரேமதாசாவின் மரணங்களால் தமது கட்சியின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படமாட்டாது என்றும், ஆகக் குறைந்தது ஐந்து மாகாணசபைகளையாவது தமது கட்சி கைப்பற்றும் என்று நம்புவதாகவும், தேர்தலுக்குப் பின்னர் ஐனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூட்டணி அமைக்கும் வாய்ப்புகள் உண்டு என்றும் தெரிவித்தார்.

## காமினி

ளப்பட்டு அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் கலாநிதி வீரசூரிய தெரிவித்தார். அதுவும் இராணுவ அணி விலக்கப்பட்டது பற்றி காமினி திசாநாயக்கா பொலிஸ் மா அதிபருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் புகார் செய்த பின்னரே பொலிசார் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டனர் என்றும் கலாநிதி வீரசூரிய குறிப்பிட்டார்.

## தெருக் கூத்து

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது "யார் இவர்கள்" என்ற தலைப்பிலான உளவாளிகள் தொடர்பான குறுகிய நேரத் தெருக்கூத்து காட்டப்பட்டு வருகின்றது. இதன்மூலம் மக்களுக்குள் மக்களாக மறைந்திருந்து தகவல் கொடுப்பவர்களை இனம்கண்டுகொள்வதும், எமது போராட்டத்திற்கு உதவுவதும் இலகுவாக இருக்கும் என மக்கள் கருதுகிறார்கள். (16)

## தற்கொலை

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் பிரேதத்தைத் தாங்கிய பெட்டியைக் கண்டதும் பிரேமதாசாவுக்கு மிக நெருங்கியவரான சுப்பையா (வயது 53) என்பவர் தற்கொலை செய்துகொண்டார்.

சுப்பையாவின் மகன் விஜயகுமாரை மேற்கோள்காட்டி கொழும்பில் செய்தித்தாள் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

## பிறப்பு அத்தாட்சி பத்திரம் விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 1954 ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்களுக்குரிய பிறப்பத்தாட்சிப் பத்திர விண்ணப்பப்படிவங்கள் தற்போது மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுதி வழங்கப்படும் மேற்படி ஆண்டில் பிறந்தவர்களுக்கான இரு பக்கப் படிவங்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களில் இவ்விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

வேலை நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12·00 மணிவரை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## புகையிரத முகாமில் குடிசைகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலைய முகாமில் தங்கியிருக்கும் தீவக மக்களுக்கென நிலையவளவில் குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒன்றிற்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒன்றாக குடியிருப்பதனால் ஏற்படும் இடநெருக்கடியை நீக்கும் பொருட்டு அத்தகைய குடும்பங்களுக்காக இக் கொட்டில்கள் அமைக்கப்படுகின்றன.

தனித்தனிக் கொட்டில்களாக அமைக்கப்படும் இக் கொட்டில்கள் சுமார் நாற்பது வரை அமைக்கப்படும் என்றும் இவற்றை 'சிறுவர் பாதுகாப்பு நிதியம்' அமைத்துக் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## முனை வெளிச்சவீடு திருத்தவேலை ஆரம்பம்

(வடமராட்சி)

கடல் அரிப்பினால் நீண்டகாலமாக சேதமடைந்து வந்த முனை வெளிச்ச வீடு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

முனை கடற்தொழிலாளர் சங்க தொழிலாளர்களும் பொதுமக்களும் இணைந்து புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பாரிய வேலைத் திட்டம் கடற்புலிகள் தமிழீழ ... செயலர் திரு. சி. முருகேசம்பிள்ளை கடந்த 5 ஆம் திகதி இப்பாரிய வேலைத் திட்டத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

## மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு

(நெல்லியடி)

மந்திகைஅரசினர் வைத்தியசாலையில் பல மருந்து வகை... பிளாஸ்ரர் பஞ்சு, பன்டேஜ் ஆகியனவற்றுக்கே பெரும் தட்டுப்பாடு ...

# இரு பொலிஸ் அதிகாரிகளை விசாரணையிலிருந்து நீக்குக

## திருமதி லலித்தின் சட்டத்தரணி கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பான பொலிஸ் புலன் விசாரணைகளுக்கு பணிப்புரை வழங்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ராஜபக்ச, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. எஸ். செனிவிரத்ன ஆகியோரை அந்த விசாரணைக் குழுவிலிருந்து விலகிக் கொள்ளும்படி பொலிஸ்மா அதிபர் ஏர்னெஸ்ட் பெரேராவை லலித் அத்துலத் முதலியின் குடும்பத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். எல். எம். அமீன் ஆனந்த மல்லகொட ஜே. பி. எல்.டி. சில்வா ஆகியோருடன் தாம் கேட்டிருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா கொழும்பு பதில் பிரதம நீதிவான் எம். ஏ. டி. சில்வாவிடம் செவ்வாயன்று தெரிவித்தார்.

கடந்த 23-ம் திகதியன்று கிருலப்பனையில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்ட லலித் அத்துலத் முதலியின் மரண விசாரணையுடன் முகலன் வீதியில் இறந்து கிடந்த கொலையாளி எனக்கூறப்படும் நபரை அடையாளம் காண்பது தொடர்பான விசாரணையையும் நீதிவான் சில்வா நடத்தி வருகிறார்.

கடந்த 6-ம் திகதி நடந்த விசாரணையின் ஆரம்பத்தில் தயாபெரேரா மேலும் தெரிவித்ததாவது:

இந்த விசாரணையின்போது சாட்சியத்தை மாற்றுமாறு சாட்சிகள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. லலித்தின் கொலையில் அரசு உடந்தையாக இருந்துள்ளது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இதன் அடிப்படையிலேயே மேற்படி இரண்டு பொலிஸ் அதிகாரிகளையும் விலக்கிக் கொள்ளும்படி பொலிஸ்மா அதிபரைக் கேட்டுள்ளோம். என்றார்.

## கருத்தரங்கு

சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் இன்று பி.ப. 3 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் கருத்தரங்குத் தொடர் நடைபெறவுள்ளது. "இலங்கை அரசியலின் இன்றைய போக்கு" என்ற விடயத்தை பற்றி திரு. மு. திருநாவுக்கரசு உரையாற்றுவார்.

## போரூட் பிரதிநிதி வருகை

(வடமராட்சி)

போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் மொரே 'வாதுவ' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தார்.

இவர் பின்னர் வடமராட்சி போரூட் அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டார் இராணுவ நடவடிக்கைகளினால் உளரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பார்வையிடுவதற்காக இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இரண்டு வாரங்கள் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து தனது வைத்தியத்துறையை மேற்கொள்வார். (யோ)

## ஆலோசனைக் கூட்டம்

ஜனசக்தி கிராம அபிவிருத்தி தொழிலுக்கான நிதியுதவி ...

## அரசாங்கம்

சிலர் சந்தேகம் தெரிவிக்கின்றனரே அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று வினவப்பட்டபோது;

"ஜனாதிபதி ட்ரூமன் பற்றியும் ஆரம்பத்தில் இவ்வாறு தான் பேசினார்கள். ஆனால அவர் இரு தடவை ஜனாதிபதிப் பதவியை வகித்தார். ஆரம்பத்தில் ஒரு தையல் காரரின் மகன் என்று தான் ட்ரூமன் பற்றிக் கேலி பேசினார்கள். ஆனால் அவர் தனது ஆளுமையைப் புலப்படுத்தினார். அணுகுண்டுகளையும் வீசினார். ஆனால் விஜயதுங்காவிடம் அணு குண்டுகள் இல்லைத் தானே" என்று பதிலளித்தார்.

இன்றைய நிலையில் இலங்கையின் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று வினவப்பட்டபோது;

'2400 ஆண்டுகளுக்கு மேலாக மனிதகுலம் வாழ்ந்து உள்ளது. இதைவிடப் பெரிய அழிவுகளை எல்லாம் சந்தித்துள்ளோம். ஜனாதிபதி பிரேமதாசா - லலித் அத்துலத் முதலி என்னும் இரு முக்கிய மனிதர்களை இழந்து விட்டோம் என்பதற்காக அதிகம் அலட்டிக்கொள்ளக்கூடாது தினமும் இரண்டு அல்லது மூன்று பேர் கொல்லப்படுகின்றார்கள் அல்லது தற்கொலை செய்துகொள்கிறார்கள். பதினேழு மில்லியன் மக்களிலும் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவானோரே வன்முறையில் நாட்டம் கொண்டவர்கள். ஆனால் பெரும்பான்மையினரான அகிம்சாவாதிகள்பற்றி நாம் அதிகம் பேசிக்கொள்வது இல்லை" என்று குறிப்பிட்டார்.

ஒரு தேசிய அரசாங்கம் இன்றைய நிலையில் அமைப்...

## மாணவ அறிவித்தல்கள்

## சம்பளம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பங்குனி மாதத்திற்குரிய சம்பளம் இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவு சுன்னாகத்தில் உள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து ''காசோலை''யாக வழங்கப்படவுள்ளதாக லங்கா சீமெந்து நிறுவன கணக்காளர் சி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். [பா]

அவர் மேலும் கூறுகையில் பிரேமதாசா தனது அறிக்கைகளைத் தவிர எந்த அதிகாரப்

### காமினி

ளப்பட்டு அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் கலாநிதி வீரசூரிய தெரிவித்தார். அதுவும் இராணுவ அணி விலக்கப்பட்டது பற்றி காமினி திசாநாயக்கா பொலிஸ் மா அதிபருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் புகார் செய்த பின்னரே பொலிசார் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டனர் என்றும் கலாநிதி வீரசூரிய குறிப்பிட்டார்.

டன் கூட்டணி அமைக்கும் வாய்ப்புகள் உண்டு என்றும் தெரிவித்தார்.

## முனை வெளிச்சவீடு திருத்தவேலை ஆரம்பம்

(வடமராட்சி)

கடல் அரிப்பினால் நீண்ட காலமாக சேதமடைந்து வந்த முனை வெளிச்ச வீடு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

முனை கடற்தொழிலாளர் சங்க தொழிலாளர்களும் பொதுமக்களும் இணைந்து புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பாரிய வேலைத் திட்டம் கடற்புலிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், பருத்தித்துறை பிரதேச செயலகம், வடமராட்சி போரூட் நிறுவன ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி. முருகேசம்பிள்ளை கடந்த 5 ஆம் திகதி இப்பாரிய வேலைத் திட்டத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

### தமிழீழ

விடை அளிப்பர்.

விஞ்ஞானச் செயன்முறைத் தேர்வும, அறிமுறைத் தேர்விலும் பெற்ற புள்ளிகள் ஒன்றாக்கப்பட்டு விஞ்ஞானப் பாடத்திற்கான இறுதி மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் எழுத்துத் தேர்வு செப்டெம்பர் மாத இறுதி, அக்டோபர் முதல் வாரத்தில் நடைபெறும். விஞ்ஞான பாட செயன்முறைத் தேர்வு அக்டோபர் மாதம் மூன்றாம் வாரத்தில் வட தமிழீழம் எங்கும் நடைபெறும் 100 தேர்வு நிலையங்களில் அண்ணளவாக 25,000 பரீட்சார்த்திகளுக்கு இருதினங்களில் நடாத்திமுடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். புகையிரத நிலைய முகாமில் தங்கியிருக்கும் தீவக மக்களுக்கென நிலையவளவில் குடிசைகள் அமைக்கப்பட்டு

பட்ட குடும்பங்கள் ஒன்றாக குடியிருப்பதனால் ஏற்படும் இடநெருக்கடியை நீக்கும் பொருட்டு அத்தகைய குடும்பங்களுக்காக இக் கொட்டில்கள் அமைக்கப்படுகின்றன.

தனித்தனிக் கொட்டில்களாக அமைக்கப்படும் இக் கொட்டில்கள் சுமார் நாற்பது வரை அமைக்கப்படும் என்றும் இவற்றை 'சிறுவர் பாதுகாப்பு நிதியம்' அமைத்துக் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் பல மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது குடாநாடெங்கும் பரவி வரும் மலேரியாக் காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களுக்குரிய குளிகைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்குரிய மருந்துகளும், பூச்சி மருந்து, தடுப்பு ஊசி மருந்து வகைகள், காயங்களுக்குப் பாவிக்கப்படும் பிளாஸ்ரர் பஞ்சு, பன்டேஜ் ஆகியனவற்றுக்கே பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இவற்றில் ஒருதொகுதி மருந்து வகைகள் நாளை 13ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவுள்ள குமண கப்பலில் வந்து சேருமெனவும், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி டாக்டர் திரு எஸ். கதிரவேற்பிள்ளை எமது நெல்லியடி செய்தியாளருக்குத் தகவல் கொடுத்துள்ளார். (36)

## கனடா மணமகன் பொலிசாரால் கைது

திருமணம் செய்து கொள்வதற்காக இலங்கை வந்த ''கனடா மாப்பிள்ளை''யான தனது மகனை காரணம் கூறாமல் கைது செய்து பொலிசார் சட்டவிரோதமாக தடுத்து வைத்திருப்பதாக தெரிவித்து விடுதலைக்கு உதவுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளார் தாய்.

குருநாகல் வீதி முனீஸ்வரம் சிலாபத்தைச்சேர்ந்த கைலாய பிள்ளை தங்கம்மா என்பவரே, சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராஜா ஊடாக இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்.

மன்றில் ஆஜர்செய்யும் ஆட்கொணர்வு சட்டவிரோத கைது தடுப்பு தொடர்பான அடிப்படை உரிமை மீறல் இரண்டும் இணைந்த கைலாய பிள்ளை கமலநாதன் (20) என்பவர் சார்பில் இந்தமனு தாக்கலாகியுள்ளது.

மேலும் தங்கம்மா இம்மனு பற்றி குறிப்பிடுகையில், எனது மகன் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி கைதானார் எனவும் அவரின் கைதுபற்றி இதுவரை பொலிசார் எதுவித காரணமும் தெரிவிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### தகுதிகாண் பரீட்சை

பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் வழங்குவதற்கான தகுதிகாண் பரீட்சை ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### திட்டமிட்டபடி

சையும் திட்டமிட்டபடி வைகாசி மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் மட்டும் நடைபெறும் என யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சி)

### ஈ.பி,ஆர்.எல் எவ்.

இவ்வாறான சிந்தனைகளை கொண்ட நவசமசமாஜ கட்சிக்கு வாக்களிக்குமாறும் தமிழ்மக்களை வேண்டுவதாக ஈ. பி ஆர். எல். எவ். நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

### வல்வை

கடந்த புதன்கிழமை மாலை கோட்டையில் வைத்து கைது செய்யப்பட்ட இந்த வாலிபர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மைத்துனர் என்று சந்தேகிக்கப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### பொலிசாரின்

யும் உடன் துப்புரவு செய்யப்பட்டது.

ஆனால். இதனால் தடயவியல் நிபுணர்கள் தடயங்களைக் கண்டுபிடிக்க இயலாத நிலை தோன்றியிருப்பதாலேயே குற்றப்புலனாய்வுப் பொலிசாரும்,ஸ்கொட்லான்ட் யார்ட் விசாரணைக் குழுவினரும் திகைப்படைந்துள்ளனர்.

சேர்ந்த டாக்டர் மொரே 'வாதுவ' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தார்.

இவர் பின்னர் வடமராட்சி போரூட் அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டார் இராணுவ நடவடிக்கைகளினால் உளரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பார்வையிடுவதற்காக இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இரண்டு வாரங்கள் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து தனது வைத்தியத்துறையை மேற்கொள்வார். (யோ)

### ஆலோசனைக் கூட்டம்

ஜனசக்தி கிராம அபிவிருத்தி தொழிலுக்கான நிதியுதவி வழங்குதல் சம்பந்தமான ஓர் ஆலோசனைக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்புத்துறை சனசமுக நிலையத்தில் நடைபெறும்.

யாழ் பிரதேசச் செயலாளர் திரு க. குணராசா, யாழ். திட்டமிடல் அதிகாரி, ஜே / 62 கிராம சேவையாளர் ஆகியோர் சமுகத்தில் தும்புத் தொழில் செய்வோர்களுக்கான நிதியுதவி வழங்குதல் பற்றி ஆராயப்பட உள்ளது. )42)

### கறுக்காய்

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளிலும் எறிகணைச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரியவருகிறது. சேதவிபரங்கள் தெரியவில்லை. (86)

உள்ளது. இதைவிடப் பெரிய அழிவுகளை எல்லாம் சந்தித்துள்ளோம். ஜனாதிபதி பிரேமதாசா - லலித் அத்துலத் முதலி என்னும் இரு முக்கிய மனிதர்களை இழந்து விட்டோம் என்பதற்காக அதிகம் அலட்டிக்கொள்ளக்கூடாது தினமும் இரண்டு அல்லது மூன்று பேர் கொல்லப்படுகின்றார்கள் அல்லது தற்கொலை செய்துகொள்கிறார்கள். பதினேழு மில்லியன் மக்களிலும் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவானோரே வன்முறையில் நாட்டம் கொண்டவர்கள். ஆனால் பெரும்பான்மையினரான அகிம்சாவாதிகள்பற்றி நாம் அதிகம் பேசிக்கொள்வது இல்லை'' என்று குறிப்பிட்டார்.

ஒரு தேசிய அரசாங்கம் இன்றைய நிலையில் அமைப்பது பற்றி என்று வினவப்பட்டபோது:

''இத்தகைய ஒரு நடவடிக்கை தற்போதைய ஜனாதிபதி தனது அதிகாரத்தை நிலைநிறுத்திய பின்பு மேற்கொள்ளப்படலாம். ஆனாலும் அதற்கு முன்பான இன்றைய சூழல் தேசிய அரசாங்கம் அமைப்பதற்குப்பொருத்தமானதென நான் நினைக்கவில்லை'' என்று தெரிவித்தார்.

ஐ. தே. க. மேலும் பிளவு படும் என்று கூறப்படுகிறதே எனக் கேட்கப்பட்டபோது;

''நான் அத்தகைய பிளவு எதையும்காணவில்லை. லலித், காமினி போன்றோர் பிரிந்து சென்று புதிய கட்சியை அமைத்தனர். இது போலத்தான் பண்டாரநாயக்கா பிரிந்து சென்று சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்'' என்றார்.


## மரண அறிவித்தல்கள்

### லோப்பு அமிர்தநாதர்

மண்டைதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த லோப்பு அமிர்தநாதர் 11-05-93 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற றோசம்மாவின் அன்புக் கணவரும் அகஸ்தீன், செல்வலிங்கம், செல்வநாயகம், யூலிற்றா, நசரேத்தம்மா, இம்மனுவல் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமலசீலி, எவாஞ்சலி, வனஜா, ஆரோக்கிய நாதர், யோண்பின்ரன், றஞ்சி(கனடா) ஆகியோரின் மாமனாரும் அருள்றாஜ், றொசாந்தினி, சோபா, லோஜனா, யோண்சன், நொறின், யசீக்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.05.93) புதன் மாலை 3.00 மணியளவில் இலக்கம் 31, 2 ம் குறுக்குத் தெரு, குருநகரிலுள்ள இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அமிர்தநாதர் அகஸ்தீன்
(மகன்)

(4856)

### சின்னப்பு நாகரெத்தினம்

(இராசு ஆசாரி)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னப்பு நாகரெத்தினம் (இராசு ஆசாரி) 05/05/93இல் நயினாதீவில் காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி பத்மலோசினி (ஆசிரியை, புங்குடுதீவு மகாவித்தியாலயம்), லிங்கேஸ்வரன் (சுவிஸ்), ரங்கேஸ்வரன் (லண்டன்), மோகனேஸ்வரன் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், நடராசா, கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், சேதுலிங்கம் (இலிகிதர், புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கம்), திலகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவியின் அன்புப் பேரனும். ஆறுமுகம், நாகரெத்தினம், சண்முகநாதன், தங்கம்மா, தங்கமுத்து. இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-5-93 அன்று நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
இ. சேதுலிங்கம்
(மருமகன்)

தவலோகநாதன் வீதி,
கட்டைப்பராய். (4854)

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G,A.Q 1994 ஏப்ரல்
B. A 1994 ஏப்ரல்

பொருளியல்
S. வரதராஜன்
B.A. (Hons.)

ஆரம்பம்: 16.5.93
ஞாயிறு 1. 00 p.m
(சி/6609)

## தேவை

முழுப்போத்தல்கள் (சாராய வெற்றுப் போத்தல்கள்]
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: தாயகம் பல் பொருள் அங்காடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உதயம் பல் பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(4857]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 11-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9392

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-1111, 41-9876, 41-7041, 24-4153, 24 5127
28-1862. 26 0536, 40-2394, 26-6984, 28-0882
26-5870, 24 6439, 26-3146, 24-5529, 24-5703

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9052, 26-8600, 27-7653, 27-2016, 27-9771
40-7499, 28-3439, 26-3130, 41-9759, 26-4691
28-8589, 28-6853, 22-6897, 26-3812, 27-9030
26-2941, 27-9489, 42-6226, 26-5244, 26-0786
27-3946.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 12 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.